உ

முருகன் துணை.

மருதகிரிமுருகனின் திருவருட்கவிராஜ விகடகேசரி

கோவை - குழந்தைதாஸ் அவர்களியற்றிய

பஞ்சாமிர்த

# பக்திரசக்கீர்த்தனம்



சூளை - மாணிக்க நாயகரவர்களால்

சென்னை சூளை

பெரியநாயகியம்மன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

காபிரைட்.] 1927. [விலை அணா 3.

இப்புத்தகம் தேவையானால், எஸ். டி. மாணிக்க நாயகர், இராமலிங்கம் அண்டு கம்பெனி, சூளை மதராஸ்.

உ

முருகன் துணை.

# பஞ்சாமிர்த
# பக்திரசக் கீர்த்தனம்.

## 1. விநாயகர் துதி வெண்பா.

சீராரும் பக்திரஸ திவ்யக்கீர்த் தனங்கள்
பாராருஞ் செந்தமிழாற் பாடுதற்கு — காராரும்
அத்திமுகத் தைங்கரனா மாறுமுகன் சோதரனை
நத்தியுளம் வைத்திட்டே னான்.

## 2. சுஜனஜீவனா என்ற மெட்டு.

இராகம் - ஹரஹரபிரியா, தாளம் - ரூபகம்.

பல்லவி.

மோதகப்ரியா யானை முகனேசகாயா ஞான மோ

அநுபல்லவி.

வேதநாயகா சிவ வேடர் தாயகா
விண்ணோர்தொழும் கண்ணபிரான் உண்மைமருகா ஞான மோ

சரணம்.

புனிதயோகமௌனதீரர் போற்றும்சீர்சுகிர்தமூலா
இனியரூபதேககாந்தி யிலகிடும்ஸ்ரீகருணைசீலா
குருவேவந்தனம் இதோ குணமாய்தந்தனம்
கோவைநகர் குழந்தைதாஸன் கவிதைசூடிடும் ஞான மோ

## 3. சரஸ்வதி துதி வெண்பா.

தமிழ்கடலிற் காதாரத் தாயே கலைமகளே
அமிழ்தாகக் கீதங்க ளுரையுதற்கு — தமியேனின்
நாவிலமர்ந் தாதரவாய் நல்லிசைகள் காட்டிடுவாய்
தாவினேன் நின்கமலத் தாள்.

## 4. வனஜாட்சி என்ற மெட்டு.

இராகம் - தேசிகதோடி, தாளம் - ரூபகம்.

பல்லவி.

கலைவாணி கரமதில் வீணைகொண்ட

அநுபல்லவி.

கூராயிந்தவேளை பாராயுந்தன்கண்ணால்
நேராய்நந்தசுகம் தாராய்சிந்தையுடன்

சரணங்கள்.

அலைகடல்துரும்பா யலைந்தேனே அம்மா
அதிமதுரிதநலம் பெருமல்சும்மா
உலதனில்மெழுகென வுருகியேஎன்மா
உளமதுதியங்கி பலவிதம் லங்கி
புளகிதம்மயங்கி அலரினேன் கலங்கி கலை
சேவைசெய்திடும் புலவரின்மாதா
சேயனுனவென்மேல் செய்வதுவாதா
கோவைதாசன் குழந்தையின்போதா
குணமிகும்தமிழை மனதுடன் கொண்டு
கணமதில்பிழையை கனமுட ராய் கலை

## 5. முருகன் துதி விருத்தம்.

அப்பனேமுருகாவெந்த னுருயிர்க்காதல்வேளே
ஒப்பிலாமணியே யுலகிற் றுவமையொன்றில்லாவரசே
விப்பிரர்போற்றுந்தேவே வீரரின்னெஞ்சநிறைவே
தப்பிதம்யாவுநீக்கித் தமியேனுக்கருள்செய்வாயே.

## 6. கல்யாணஞ் செய்துவையுமே என்ற மெட்டு.

இராகம் - இந்துஸ்தான் உஷி, தாளம் - ஆதி.

பல்லவி.

கந்தாகடம்பா சண்முகா உந்தன்
கருணைவிழியால் நோக்கி
தருவாயருளே தேக்கி கந்

அநுபல்லவி.

1 செந்தாமரைமலர்க் கண்ணணின்மருகா
சிவசரவணபவ ஹரஹரமுருகா
நந்தாமணியணி குறமகள்மோகா
நயகுணபுயபல சுகிர்தவி வகா கந்

2 மணமிகும் னியீல் வாழ்பிரகாசா
மதுரிதமொ ல் குஞ்சரிநேசா
கணங்களினிடை ார் சிவன்சுததேசா
கலகலவெனுமயில் நடனவிஸ்வாசா கந்

3 அருணகிரிதனே யாண்டநற்குருவே
அருமறைதனில்வளர் பரம்பொருள்கருவே
பெருநகைமுகமுடன் விளங்கிடுமுருகவே
பிரபலவிகசித குவலயத்திருவே கந்

4 தேவையாய்முனிவரைக் கார்த்திடும்பூபா
தேன்கவிக்குழந்தையாம் தாசன்பிரதாபா
பூவைமலைமகள் புளகிதாதேவா
புகழ்பெரும்தவநெறி வளர்த்திடும்தாபா கந்

## 7. ஐயாபழனிமலைவேலா என்ற மெட்டு.

இராகம் - சஹானா, தாளம் - ஆதி.

1 வந்தாள்பழனிமலை வாசா குற
வள்ளிமருவும் பிரகாசா
செந்தாமரைக்கண் விலாசா தயை
செய்தருள்சிவகும ரேசா வந்

2 பெற்றதாய் தந்தையெலாம் நீயே ஒரு
பேதமின்றியருள் செய் வாயே
கற்றவர்போற்றும் சிவன் சேயே சிறு
கடுகளவுகிருபை கொள் வாயே வந்

3 சஞ்சலப்பட்டுடைந்தேன் மனமே கோடி
சந்தேகத்தால் வாடினேன் தினமே
கொஞ்சமு மில்லையெனக் கினமே வெகு
கொடியவ ஞயினுப்பிர தானமே வந்

4 பச்சை மயிலேறும் வேலா மனம்
பரவச தெய்வானையின் லீலா
கொச்சையாக் கருக்கோர் காலா கோவை
குழந்தைதாசன் தமிழ் மூலா வந்

## 8. அம்பா மதுரைமீனாக்ஷி என்ற மெட்டு.

இராகம் - இந்துஸ்தான் பியாக், தாளம் - ஆதி.

1 கந்தாமயிலேறு முல்லாசா இரு
காதற்கிளியின் நேசா விலாச
கயிலைசிவனுப தேசா
காரும் பிரகாசா
காரும் பிரகாசா
காரும் பிரகாசா கந்

2 பன்னகசயனன் மருகா பக்தர்
பாடிடும்மா முருகா சுமுகா
பராபரனே வருக
பாக யூக குகா
பாக யூக குகா
பாக யூக குகா

3 தஞ்சமென்றுன்னை யடைந் தேனே நீ
தாங்கிக்கொள்வாய் கடனே உடனே
தருவாயருள் திடனே
தாமதமேன் கோனே
தாமதமேன் கோனே
தாமதமேன் கோனே தஞ்

4 வேதாந்த ஞானியரின் துணைவா சதுர்
வேதனை சிறை வைத்தவா விண்ணவா
விரும்பினேனிதோ காவாய்
மேகமொடு வாவா
வேகமொடு வாவா
வேகமொடு வாவா

5 கருங்கல்லோவுன் நெஞ்சமிரங் காதோ ஒரு
கடவுளக்கிது சூதோ பின் எதோ
கடையேனுடனே வாதோ
காலமிது தீதோ
காலமிது தீதோ
காலமிது தீதோ

6 கோவைக்குழந்தை தாசன் பாடி தொழும்
குவலயபுகழ் சூடி விளையாடி
குணந்தருவோனே தேடி
கோரினேனே நாடி
கோரினேனே நாடி
கோரினேனே நாடி

## 9. சரிசரி சாமுத்ரிகாலக்ஷணம் என்ற மெட்டு.

இராகம் - கமாஸ், தாளம் - ஆதி.

பல்லவி.

புரி புரி முருகா எனக்கு தயை புரி புரி

### கண்ணிகள்.

1 கரியமாலின்மருகனான கந்தனேகிருபாகரா
கனகமாடிதுலங்கும்பழனி வாசனேமனோகரா
கருணையா தாரா பாவ
இருளின் சம்மாரா
ககனோதய சுகமாமயில்
புகழ்மேவிட மிகவேவிடும் புரி புரி

2 அய்யாவுந்தன்பெருமைதன்னை என்னசொல்வேன்நேசனே
அகிலலோகமுகவிலாச ஆண்டவாபிரகாசனே
அருண கிரியை அன்று
பெருமை யாசவே
அருள்தந்துநீ இருள்போக்கியே
பொருள்கொண்டிட மருள்நீக்கிய புரி புரி

தஞ்சமென்றுகெஞ்சுவேனைக் காக்கயின்றுவல்லையா
தாசன்கோவைக்குழந்தைகீதம் காதிற்கேட்கவில்லையா
தாப மாகவே மனக்
கோப மேகவே
தனையேன் எனை வினைமாற்றியே
முனைதேர்ந்திட நினைவாகவே புரி புரி

## 10. மன்றுளாடியவா என்ற மெட்டு.

இராகம் - பைரவி, தாளம் - ரூபகம்.

### பல்லவி.

இன்று ஓடியே வா வேலா

அநுபல்லவி.

கன்றைவிட்ட மானைப்போல
கதறினே னடியவ னென்முனே இன்

சரணங்கள்.

1 மன்றுளாடிடும் மாதேவன்பாலா
மாதுகுறவள்ளி போகசுசீலா
வென்றுசூரர்தனை வீழ்த்தியகோலா
விகசிதமயில் தனிலேறிடும்
மகபதிமகழ் புகழ்மாமூலா இன்

2 கண்கலங்கிகீரர் பாடிடவந்தவா
கானலோலதிருப் புகழுக்குகந்தவா
பண்குயில்கூவும் யழனியில்நின்றவா
பரமனேபரவச மடைந்திட
சிரமதில் திருவடியணிந்திட இன்

3 கூர்வடிவேலினைக் கொண்டசிங்காரா
கோவைக்குழந்தை தாசனுக்குபகாரா
சீர்பெருந்தொண்டரைத் தேற்றும்கிருபாகரா
சிற்பரா தற்பர ஒளிதிகழ்
பொற்புரு அற்புத சண்முகா இன்

## 11. பாலாபிஷேகம் என்ற மெட்டு.

சிந்துபைரவி, தாளம் - சாப்பு.

பல்லவி.

கோலாகலானந்த குகனே குறவள்ளி
கொஞ்சிடும்ரஞ்சித வேலவனே கோ

அநுபல்லவி.

சீலாவிசாலகோ பாலன்மருகனே
சீர்பூத்தபழனியில் வாசவனே கோ

தொகையரா.

பாலோடுதேனும் பஞ்சாஅமிர்தமும்
பரவசமாய்க்கொண்ட குமரா
வேலோடுவெற்றியொளி தங்கியமாமணிமாலை
விரும்பியே பூண்டவீரா

முடுகு.

தரிகுகு தகணக தரிகிட தணஜெணு
திமிதக வெணநடமிடு மயில்தனில் வரும்

பல்லவி எடுப்பு.

சிங்காரக் கோவைக் குழந்தை சகாயா
சிகரக்கிரிக்கொரு நிகரில்லா தூயா கோ

## 12. அடுக்குமல்லிகை என்ற மெட்டு.

இராகம் - தேசிகம், தாளம் - ஆதி.

கண்ணிகள்.

1 சிறக்கும்ரஞ்சித குறத்தி மணாளா தேவாதிதேவர்
சுராக்குந்தேன்மலர்மணக்குஞ்செந்தாளா வெகு
திருமதுரித மொழிபுகல்யானை
மருவியசுக நகைமுகந்திகழ்

கருத்தவசுரர்வெருத்துயிர் விடவே வேலாயுதத்தை
பொருத்தமுடனேவிடுத்தபொன்கோவே புகழ்
ஞானரம்மிய தீனர்க்கருளும்
மோனவிற்பனர் போற்றுமின்பனே சி

2 இனிக்குமுத்தமிழ்முனிக்குப தேசா இணையிலாத
கனிக்கொருவலம் தனிச்சென்ற நேசா ஹரி
இசைந்துகொண்டாடும் இணக்கமருகா
அசைந்தமயிலில் அமரும்முருக சி

3 பழரசக்கவிக்குழந்தை தாசனே பாடும் சுகிர்த
குழகனின்கமழ் குமர வாசனே வாணிற்
பரவியகிரி தனில்வளர்மகா
விரவியர்தொழ வரந்தருங்குகா சி

## 13 தாதாபாய் நௌரோஜி என்ற மெட்டு.

இராகம் - தேசிகதோடி, தாளம் - ஆதி.

பல்லவி.

வா வா வா மயில்மீது
வள்ளி மணாளனே வெள்ளிநல் வேலனே வா

அநுபல்லவி.

தேவாதி தேவசீலா தீராதிதீர பாலா
திகழ்முனிவரின் குணாகிதனே
புகழ்மிகவளர் புனிதபோதனே வா

ஒப்பாரவடிவழகா ஓங்காரமதின்சுமுகா
ஓதுமுத்தமிழ் மாமுனிநேசனே
சாதுசற்குண ஞானவிலாசனே வா

தொகையரா.

மெலிவாகதொண்டரின் மேனிமிகவாடியே
　　சீர்கெட விடாததீரா
கலிநாளதனிலே கண்கண்டதெய்வமாய்
　　காசினியில் நின்றவீரா

ஷ பல்லவி எடுப்பு.

செஞ்சேவல்கொடிநாயகா　　சிங்காரமறைதாயகா
　தேவையுடனே　　　　　　பாவம்பறந்திட
　கோவைகுழந்தை　　　　　தாசனுங்கண்டிட

## 14. முருகன் துதி.

சீராருந் தென்பழனிக் கந்தனே தேவரின்
　　சின்மயா னந்த முதலே!
சிந்தையுடன் வந்தனை சந்ததமுஞ் செப்பிடும்
　　சிவயோக முனிவர் குருவே!
ஆராவமு தமொழி பேரானந்த மொடு
　　அருளிடும் வள்ளி மோகா!
அன்புருகைத் தென்புமுக யானையின் கணவனே!
　　அருமறை முடிவின் வித்தே!
பாராதி மூலனே! ஈராறு கையனே
　　பானுவொளி தங்கு முகனே!
பற்பலவி லட்சணப் பொற்புருத் தீரரின்
　　பரவச ஞான ரூபா!
மாராத தீக்கண் சூராதி சூரரின்
　　மார்பைப் பிளந்த குமரா!
மணங்கமழுந் தமிழ்தனை யிணங்கியே செப்புமென்
　　மனந்தனில் வாழு முருகா!

## 15. மலடிவயற்று என்ற மெட்டு.

1 களக்கமற்றொளிர் கனகமணிச்சபை
விளக்கமுற்றிட நடமிடுஞ்சிவன்றிரு
உளக்கருத்தினி லுரைந்திடுமுகநகை முருகேசா

2 குயில்தனைப்பழித்த குரல்மாதுமையருள்
அயிலைக்கரத்தி லழகாயுகந்தெழில்
மயிலைத்திறமாய் நடத்திடுஞ்சரவண குகநாதா

3 முனையொருகுறமகள் தன்னைமணங்கொள
தினைவனமதனிடை கிழப்பருவமாய்
நினைவுடனிருமியே நடித்தகுருபர குணசீலா

4 இழந்ததனமோ டுன்தருள்நெறிபெற
பழந்தமிழாலிசை மொழிபுகன்றிடுங்
குழந்தைதாசனி னுளமதில்வளர்ந்திடும் பெருமாளே.

## 16. இராகம் - சகாணு, தாளம் - ரூபகம்.

பல்லவி.

முருகன் தெரிசனம் ஒருதரம்கண்டால் பழவினைகள்
முழுதும்பருதிமுன் பனிபோல் போகுமே முரு

சரணங்கள்.

1 கருணையமரர்கள் தொழுதுமலர்தூவி
கலகலெனசிலம் பதிரநடமிடும்
அருவிபெருகிடும் மருதகிரிதனில்
அழகுபெறவளர் குமரகுருபர முரு

2 கதலிகமுகுகடைருந் திணைவனம்
கடுகிநடந்தொரு கிழவனுருவாகி
பதரியுதரிபொய் யிருமலெழநின்று
பருவவனிதையாங் குறவள்ளிகொண்ட முரு

3 பழந்தேனெனுந்தமிழ்க் குழந்தைதாசனின்
பரமதருமமாயரும் பூங்கனிமொழி
வழங்கமுழங்கிடக் களங்கமகன்றிட
வாமுஞ்சுகமுமே யருளுஞ்சரவண முரு

## 17. ஆசிரிய விருத்தம்.

பெற்றதாய் தந்தையுட னுற்றகன மாமனும்
பேசரிய தெய்வம் நீயே!
பெரும்பிறவிக் கடல்தாண்ட வருமினி யகப்பலும்
பேரின்ப வாழ்வும் நீயே!
நற்றரை நாவலர்கள் சொற்றொடர்ப் பண்ணில்
நளினசுக கானம் நீயே!
நவரசந் தன்னிலுந் தவயோகி நெஞ்சிலும்
நாடியொளிர் சுவையின் சுவையே!
கற்றவர் கருத்தினிற் றென்றெனச் சுரந்திடும்
கற்கண்டைப் பழித்த அமுதே!
கஞ்சமலர்க் கண்ணனின் ரஞ்சித மருகனே
கருணைவிழி வடிவே லனே!
குற்றமில் லாதவர்க் குற்றபகை நீக்கிடும்
குமரனே! ஞான போதா!
கொஞ்சுமொழி வஞ்சியாம் வள்ளிதெய் வானையின்
கோதிலா மணவா ளனே!

## 18. மருகேலரா என்ற மெட்டு.

இராகம் - ஜெயிந்தஸ்ரீ, தாளம் - ஆதி.

பல்லவி.

வருவாய்குகா ஓ சண்முகா வரு

அநுபல்லவி.

வருவாயேவேலா வள்ளிமனலோலா
குருவானசீலா குமராவிசாலா வரு

சரணம்.

சந்திரவதனு சுகுணபூஷணு
சுருதிவேதமும் சொல்லவறியாத
இந்திரன்மகிழும் குஞ்சரிமணாளா
இனிமைத்தாசன்குழந்தைஇசையமிர்தமுண்ண வரு

## 19. எப்புடுகிருபகல்குனு என்ற மெட்டு.

இராகம் - முகாரி, தாளம் - ஆதி.

பல்லவி.

எப்போது மன மிரங்குமோ
ஈராறுகை வேலனே எப்

அநுபல்லவி.

முப்போதிலு முன்னைநானே
மொழிந்திட்டேன் ஞானவானே
ஒப்பியென்னை யாளாமலே
உதாசீனம் செய்தலேனோ எப்

சரணம்.

உலேயில் மெழுகெனவே
உருகினேன் பாவி அந்தோ
அலேகடல் துரும்பதாய்
அலருங் குழந்தைவாழ எப்
செய்வது நின்கடனே
செப்புன் மனத்திடமே
மெய்யடியேன் மாணிக்கமே
கைதவஞ் செய்குமரா எப்

## 20. ஆசிரிய விருத்தம்.

மக்களேப் பெற்றுவீண் துக்கந் துடரவே
மண்டலந் தன்னில் விட்டே
மாபாவ நோயுடன் கோபா வேசமும்
மருவிடக் கலங்க வைத்தே
பக்கமிரு பெண்களேத் தக்கவடி வைத்துநீ
பரவசம தாய்க் கொஞ்சியே
பாலோடு தேனுடன் பஞ்சா அமிர்தசுவை
பானவபி ஷேகங் கொண்டே
மிக்கவலங்கார விளக்க முடனே நிதம்
மேலோங்கு மலேயில் வாழ்தல்
மின்னுமறை யாகமம் பன்னிய விவேகனே
மிகமிக முறையோ சொல்லாய்
தக்கபதில் கூராயேல் நெக்குருக நானினித்
தமிழ்மொழிதல் வீணே யன்றோ?
தந்திமுகனுக் கிளேய கந்தனே சுந்தரா
தண்டா யுதக்கட வுளே!

## 21. ஐயா பழனிமலைவேலா என்ற மெட்டு.

1 கந்தா கடம்பாமுரு கேசா எனைக்
கார்த்தருள் பழனியில் வாசா
மந்தாரை மாலையழ கேசா வள்ளி
மான்தின மகிழும்பிர காசா கந்

2 பக்தனைக்காக்க நீ வல்லையா கண்ணால்
பார்க்கவுந் திருவுள மில்லையா
பித்தமதி பாவங்கள் தொல்லையா என்
பீடையகல வந்து நில்லையா கந்

3 தாய்தந்தை குருதெய்வம் நீயே இது
தருணம்திருவருள் செய் வாயே
பேய்நாதன் சங்கரனின் சேயே ஒரு
பெருநெறி மொழிசொல்லு வாயே கந்

4 பச்சை மயிலின்மேலேறும் சீலா திகழ்
பார்வதி தனக்கொரு பாலா
இச்சை முகநகை விசாலா கவி
இனிமைக் குழந்தைதாசன் வேலா கந்

## 22. எப்படித்தான் தாய்வயற்றில் என்ற மெட்டு.

இராகம் - தன்யாசி, தாளம் - ஆதி.

பல்லவி.

1 குமர குருபரனே குறவள்ளி நாதா
கொடுத்தருள் தெரிசனமே குமர

அநுபல்லவி.

சமானிற்சிறந்த சற்குணவானே
அமரர்தொழும்சுகிர்த அறுமாமுகனே குமா

சரணங்கள்.

2 வள்ளிமனமகிழ மருவியமாரா
வானமதிவதனக்குஞ் சரிசீரா
புள்ளிமயிலிமேலேறும் புண்யகெம்பீரா
புலவர்களுபர்வுற பாடும்சிங்காரா குமா

3 பழனிமலைதனில் வாழ்ந்திடும்வேலா
பாகைப்பழித்தசுவைத் தமிழுக்கோர்மூலா
குழந்தைதாசன்புகழ் மனோகரசீலா
குணமுள்ளதொண்டருக் கினியசுசீலா குமா

## 23. கலிலோகரி என்ற மெட்டு.

பல்லவி.

குமரேசா குறமகள் தழுவிடும்
குருபர குகநாதா வெகு சுகிர்த குமா

அநுபல்லவி.

அமரேசா அடியேன் படுந்துயரம்
அகற்றிட மயில்மீதில்வா சுகுணமூவா குமா

சரணங்கள்.

1 பவமகிமைக் கடலினிலனுதினம்
பாவியேன் வீழ்ந்துழன்றே
தவயோக நெறிதனையறிந்திடா
தலைந்துடல் மிகமெலிந்தேன் நலிவடைந்தேன் குமா

2 இனிதான மறையவர் துதித்திடும்
இணையிலா முருகோனே
கனிவான குழந்தை தாசன்மணம்
கமழ்தமிழ் கொள்வோனே மகாபூமானே குமர

## 24. காணவேணும் காணவேணும் என்றமெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி, தாளம் - ஆதி.

கண்ணிகள்.

1 சென்னிமலை தன்னில்வாழும் வேலா உன்னை
சிந்தித்துப்பணிந்தேன் சிவன் பாலா தூய
மாமறையோர் நேமமுடன்
பூமலரால் பூஜிக்கின்ற
புண்யா சுப்ர மண்யா செ

2 கையில்வேலைத் தாங்கிமலர் சூடி அன்று
காதகரைக்கொன்றாய் புகழ் தேடி இந்த
மண்ணுலக மாந்தர்களின்
எண்ணந்தனை ஈடேற்றிடும்
குருவே இன்ப உருவே

3 வள்ளிதெய் வானையுடன் கூடி தங்கப்
புள்ளிமயிலேறி யென்னை நாடி வான
விஞ்சையர்கள் ரஞ்சிதமாய்
தஞ்சமென்றே கொஞ்சிப்பாடும்
தேவா ஞான மூவா செ

4 கோவைக் குழந்தைதாசன் கீதம் நான்
கூறிப்பணிந்தேன் செய்வாய் போதம் இந்த
சுத்துகடல் சூழுலகில்
நித்தப்வாடி நொந்திடாமல்
காராய் துயர் தீராய் செ

## 25. அம்பிகா வுன்மகன்குகன் என்ற மெட்டு.

இராகம் - பியாக், தாளம் - ஆதி.

பல்லவி.

ரஞ்சித ஞான சண்முகா
குஞ்சரி வள்ளியின் மோகா ரஞ்

கண்ணிகள்.

1 கொஞ்சுந்தமிழ் மாலைவீரா
கோலாகல மான தீரா
தஞ்சமென்றோர்க் கருளும்சீரா
தாச நேச முக விலாச ரஞ்

2 முத்தர்தொழும் தேவசீலா
மூலவேதம் போற்றும்வேலா
சித்தர் தனக் கினியமூலா
சீராய் வாராய் வரமே தாராய் ரஞ்

3 கூன்முதுகுக் கிழவனாய்
கூவும்வள்ளி வனத்திற்போனாய்
தேன்பொழியும் பழனிமலையோய்
தேவா மூவா தூயா வாவா ரஞ்

4 மாடிசூழும் கோவைவாசன்
மாசிலாத குழந்தைதாசன்
தேடிதினம் பாடும்நேசன்
மேதக யூக ராஜ போக ரஞ்

## 26. பாண்டியனின்றமீனாக்ஷி என்ற மெட்டு.

இராகம் - இந்துஸ்தான் தோடி, தாளம் - ஆதி.

பல்லவி.

வேண்டினேன் வேலாவுன்பாதம்—மனதினில்
விரும்பிசெய் போதம் வேண்

அநுபல்லவி.

ஆண்டியின்சுதனே மெய்வேதம்—போற்றிடும்
அரசே தாபாதம் வேண்

தொகையரா.

தீராப்பிணிதனைத் தீர்த்திடும்ஞானப்
பழனிமலை சிங்காரனே
பாரப்பாநின்கடைக்கண் பச்சைமயில்வாகனு
பாங்கான வலங்காரனே

ஷ பல்லவி எடுப்பு.

கலியுகந் தன்னிலுனைப்போலே—கடவுளும்
காணேம் புவிமேலே
பொலிவுடன் புகலுவாய்நூலே—தேவர்கள்
புகழும்சீர் முதலே வேண்

தொகையறா.

பந்தபாசமெனும் பாவக்கடலிலே
பாவிநான் மூழ்கினேனே
சிந்தைமகிழ்ந்திந்தச் சிறுவனையாதரி
ஸ்ரீதரன் மாமருகனே

ஷ பல்லவி எடுப்பு.

தேவையாய்த் தேடிவந்தேனே—பவக்குறை
தீர்செந் தூரனே

அநுபல்லவி.

கோவையின்குழந்தை தாசனே—கொண்டாடும்
குமர குருபரனே வேண்

## 27. மஹம்மதியர் குலத்தில் என்ற மெட்டு.

இராகம் - தேசிகதோடி, தாளம் - ஆதி.

கண்ணிகள்.

1 விளங்குசெந்தேன் பொழிமலர்வளர்திரு
வேதாந்த ஞானவேலா
வேண்டித்துதித்தே னுனையே எனக்கிரக்கம்
பூண்டித்தரையிலே நீயே வி

முடுகு.

தந்தாளுனதரும் செந்தாளருள்தனை
வந்தாளறுமுகக் கந்தாநகைமுக
தாமரைக்கண்ணனின் மருகா சிங்காரரூப
காமக்குஞ்சரியின் மோகா வி

2 தெருளுறுபலகலை தேர்ந்ததொண்டரின்
இருள்செறிபழவினை தீர்ந்திடும்படி
சென்னிமலையில்வாழ் வோனே நம்பியெனும்நல்
மன்னனின்வள்ளி லோலனே வி

3 களங்கமின்றியே நடமிடும்சிவனின்
கருணைக்குமரனே திருத்தொண்டர்களின்
உளங்கவர்ந்திடு முத்தமனே நான்
உறைத்திடுந்தமிழ்தனக் குணர்த்துவாய்நலந்தான்
உண்மைக்கோவைக் குழந்தைதாஸ்
ஓதும் கீதம் பேஷ் வி

## 28. தாதாபாய் நௌரோஜி என்ற மெட்டு.

இராகம் - தேசிகதோடி, தாளம் - ஆதி.

பல்லவி.

தா தா தா உனதுபாதம்
தஞ்சமென்றேழையான் கெஞ்சிவணங்கினேன் தா

அநுபல்லவி.

வேதாகமப்பொருளே வேலேந்துங்கந்தவேளே
வேகமுடன்வரும் மாமயிலேறியே
யோகசுகானந்த மாமொழிகூறியே தா

தொகையரா.

பவமாயைத்தீயிலே பாவியானுருகுதல்
பார்த்துநீ இருத்தல்நன்றோ
தவராமலெந்தனைத் தனவந்தனுக்கியே
தாழ்வுறு தரிப்பதென்றோ

பாட்டு எடுப்பு.

சிங்காரப்பூந்திருவே சீரானதேசுருவே
சிந்தைமகிழ்ந்திடுஞ் சுந்திரன்மகா
விந்தைமலைவளர் மந்திரனேததி தா

தொகையறா.

தாரணியோர் தைப்பூசநாளினிலேயுன்
தங்கரதம் ஓட்டநின்றாய்
நீரணியும்சங்கரனின் மாம்பழம்பெற்றிடப்
பூமியைச்சுற்றி சென்றாய்

பாட்டு எடுப்பு.

கோலாகலக்குமரா கோரச்சூரர்சமரா
கோவைகுழந்தை தாசனும்பாடிட
தேவைத்தொண்டரும் நற்பதம்தேடிட தா

## 29. இசைந்தசூலம் என்ற மெட்டு.

இராகம் - காம்போதி, தாளம் - ஆதி. கண்ணிகள்.

அசைந்தமயிலில் அழகுடனேறி வருவாயே
ஆறுமுகனே யுனதருளமிர்தம் தருவாயே
இசைந்ததொண்டர்களெழி லுடன்பாடும் முருகேசா
ஈசனேசா பாரிபுரவாசா சுரர்பாசா
சென்னைமலையின் சிகரத்தில்வாழும் சிங்காரா
சீருடனுனதடி தொழுதுபணிந்தேதன் ஓங்காரா
பொன்னிகணவனின் புகழ்மிகுமருகா குகநாதா
பொங்கும்நகைமுக மங்கைகுஞ்சரி சுகபோதா
முக்கனியோடினி துளசுவைபாலின் அபிஷேகா
மூலவேதாசீல பாதா முழுவேதா
மிக்கவேபுகழ் படைத்தகோவை நகர்வாசா
பக்குவனும்குழந்தை தாசன் பசுர்நேசா அ

## 30. ஆசிரிய விருத்தம்.

அண்ணலே! அன்பனே விண்ணவர் போற்றிடும்
ஆலமுண்டோனின் சுதனே!
அற்புதச் சொற்பொழியும் விற்பன விவேகரின்
அருளொழுத மாவழகனே!
கண்ணனின் மருகனே! கந்தா கடம்பனே
கார்த்திகேயக் குமரனே!
கருத்தழிந் தழுதிட்ட பொருத்தமிழ் கீரனைக்
காத்திட்ட மாதேவனே!
கண்ணில்தீப் பொறியுடன் நண்ணியே கர்ச்சித்த
காதகரைக் கொன்றபரனே!
கயல்விழி வள்ளிதனை மயல்தீர மருவிடும்
கருணையொளிர் குருநாதனே!
மண்ணவரின் கண்கண்ட தெய்வமே தொண்டரின்
மனதில்வளர் சிங்காரனே!
மங்கள மிலங்கிவளர் துங்ககிரி தோறும்வாழ்
மாசிலா முருகேசனே.

## 31. ஆனந்தம் ஆனந்தம் என்ற மெட்டு.

இராகம் - தேசிகதோடி, தாளம் - ஆதி.

பல்லவி.

சண்முகா சண்முகா சண்முகனே சிவ
சண்முகா சண்முகா சண்முகனே சண்

கண்ணிகள்.

சண்முகநாமத்தைப் பண்புடன்பாடி
சற்சங்கஞானியர் தம்முடன்கூடி

கண்கவர்யோக விசாரமேதேடி
காதலுடன் தீதுகளை வாதுடனே ஓதிடேனே சண்

எங்கும்புகழ்துங்க மாமலைவாசா
ஏறும்பச்சைமயில் தேவப்ரகாசா
சிங்கமுகசூரர் மங்கிடநாசா
சீலனே வேலனே கோலனே லீலனே சண்

கோகிலத்தொனியில் குரலையெடுத்து
கோவைக்குழந்தையின் தமிழ்படித்து
பாகுடன்கற்கண்டாய் சுவைக்கநடித்து
பதந்தருமோர் சுதந்தரமே நிதம்பெறவே இதம்புரியும் சண்

## 32. சுஜன ஜீவனு என்ற மெட்டு.

இராகம் - கமாசு, தாளம் - ஆதி.

பல்லவி.

முருகநாதனே இன்று வருவாய்போதனே ஞான முரு

அநுபல்லவி.

கருணாகரனே வள்ளி காதல் மோகனே
அந்தாருக செந்தாமரை நந்தமா முகனே ஞான மு

சரணம்.

அரக்கர்குலம் யாவும்மாய்த்த
அமரர் துணை வாழுவா
சுரக்குஞ்செந்தேன் விஞ்சைமந்த்ர
சுகனனே தேவாதி தேவா முரு

கூர்வடிவேலா யானை கொஞ்சிடும்சீலா
கோவைநகர்குழந்தைதாசன் கோற்றும்சீர்மூலா முரு

# நவநாமப் புகழ்ச்சி.

## 33. எழுசீரடியாசிரிய விருத்தம்.

அம்பர பரம்பரம் சிதம்பர பொன்னம்பலத்
தரனுமை யளித்த முருகா
அரவணையின் மீதிலா னந்தமாய்த் துயில்கின்ற
வரிமருக னென் முருகா
தும்பிமுகனுக் கிளைய தம்பிமுருகா வுயர்ச்
சோதிவேவ லேந்து முருகா
சூரசங்கார முருகா சுரக் குஞ்சரி
துலங்க மயிலேறு முருகா
உம்பர் பணிகின்ற முருகா கும்பமுனிவனுக்
குயர்ஞான மருளு முருகா
உற்றமறை யோனைசிறை யிட்டமுருகா வள்ளிக்
குற்ற மணவாள முருகா
அம்புவியில் யான்படுந் துன்பங்க ளியாவையு
மகற்றி யருளாளு முருகா
அருமைபெறு மருமறைக ளறிதற்கு மறியொணு
வாறுமுக மான முருகா. (1)

கார்கொண்ட நிலவளஞ் சூழ்ந்திரு வேளூரிற்
கருணைபுரி முத்துக் குமரா
கருதரிய தணிகா சலப்பரங் கிரிபழனி
கந்தமலை மேவு குமரா

சீர்கொண்ட தோகைமலை சென்னிமலை சோலைமலை
திகழ்நடன மாடு குமரா
திருவாவி னன்குடி சிவாசலஞ் செந்திநகர்த்
திருவருணை வாழு குமரா
யேர்கொண்ட கைலைமலை மேருகிரி சாமிமலை
யெழின்மயிலங் குடிகொள் குமரா
யென்னம்மை வள்ளிதெய் வானையுட னென்றுமுறை
யியல்கடம் பவன குமரா
ஆர்கொண்ட பலதிருப் பதிகுமரா யேழையா
மடியனை யாளு குமரா
அருமைபெறு மருமறைக ளறிதற்கு மறியொணு
வாறுமுக மான குமரா. (2)

மஞ்சுமொழி தினைப்புனக் குறவர்மகள் வள்ளிதனை
மாலையிட வேண்டி குகனே
வகையுடன் பலவுருக் கொண்டகுகனே வேங்கை
மரமாகி நின்ற குகனே
பஞ்சுமெல் லடிதேவ யானையைப் பிரிந்துயர்
பழுத்தகிழ மான குகனே
பண்புடன் மதுமாவு தின்றிடத் துணையாகி
பாணிதனை கேட்ட குகனே
வஞ்சமன மாகியாழ் மடுவிற் களைத்தவள்
மனமயங்கச் செய் குகனே
வாரண முகத்தனை நினைக்கவவன் யானைபோல்
வரவழைத் திட்ட குகனே

அஞசிகுற மாதுனைத் தழுவுகுகனே யிந்த
வடியனெனை யாளு குகனே
அருமைபெறு மருமறைக ளறிதற்கு மறியொணு
வாறுமுக மான குகனே. (3)

சுந்தர மிகுந்தகந் தாகடப் பந்தார்
துலங்கு தோளுடைய கந்தா
சுருதிமுடி வானகந்தா ஞான சூக்கும
சொரூப வடிவான கந்தா
செந்திமா நகர்மேவி வாழுகந்தா தில்லைச்
சிவனுமையின் மைந்த கந்தா
சித்தர் தொழுகின்ற கந்தாவருட் பிரமாதி
தேவர்பணி கின்ற கந்தா
சந்ததமு மன்பருள மாடுகந்தா வுயர்
சடாக்ஷரமு மான கந்தா
சர்வவல் லபமாகி நின்றகந் தாவரிய
சாமிகுரு நாத கந்தா
அந்தராந் தரத்தின்மே லமருகந்தா வெனை
யஞ்சலென் றுளு கந்தா
அருமைபெறு மருமறைக ளறிதற்கு மறியொணு
வாறுமுக மான கந்தா, (4)

சத்துசித் தானந்த சரவண பவாவெலாந்
தழைத்த மெய்ச் சரவணபவா
தன்னிக ரிலாதவோர் சரவண பவாவருட்
சாமிகுரு சரவண பவா

சுத்தவத் வீதமெய்ச் சரவண பவாமிக்க
சுயஜோதி சரவண பவா
துரியுங் கடந்தநற் சரவணமவா வுயர்ச்
சுடர்ஞான சரவண பவா
நித்தியா னந்தபர சரவண பவாவெங்கு
நிறைந்தகுண சரவண பவா
நிகரிலறு பொறியான சரவண பவாவரிய
நிமலிசுத சரவண பவா
அத்திமுக னுக்கிளைய சரவ்ண பவாவெனை
யாண்டருளு சரவண பவா
அருமைபெறு மருமறைக ளறிதற்கு மறியொணு
வாறுமுக சரவண பவா. (5)
சிங்கார மானவேலா கொடுஞ் சூரர்கள்
திண்மார் பிளந்த வேலா
செகஜோதி யானவேலா மிக்க வலிமைசேர்
சேவற்கொடி கொண்ட வேலா
தங்கவேலா திருச் செந்திவேலா திரைத்
தண்கட லழித்த வேலா
சாமிவேலா சிவச் சத்திவேலாத் திகழ்
தன்னிகரில் முத்து வேலா
மங்களா காரமய மானவேலா கதிர்
வண்மை வடிவான வேலா
மட்டில்கிர வுஞ்சகிரியைக் குலைத்திடு வேலா
மகிமைசேர் நெடிய வேலா
அங்கிமய மானவே லாசிறப் புற்றிடு
மடல்வேலா யெனை யாளுவாய்
அருமைபெரு மருமறைக ளறிதற்கு மறியொணு
வாறுமுக மான வேலா. (6)

# பஞ்சாமிர்த பக்திரசக் கீர்த்தனம்.

அண்டமுக டதிரநட மாடுமயி லாமிக்க
வருமைபெறு கனக மயிலா
அரவமதைக் காலால் மிதித்தமயிலா நல்ல
வணிநிறை கலாப மயிலா
சண்டப்பிர சண்டமயி லாவிண்டு வாகனன்
றனைச்செயித் திட்ட மயிலா
தரணிநொடி சுற்றுமயி லாவீர தண்டையணி
தண்ணடி கொள் நீலமயிலா
பண்டுசேர்க் கானமயி லாமகிழ் வுற்றிடும்
பசியநிற மான மயிலா
பலமிகுந் தவநிறைச் சூரமயிலா வன்பர்
பரவிபணி கின்ற மயிலா
அண்டருல கத்தழித் திட்டமயிலா வெனை
யன்பு வைத்தாளு மயிலா
அருமைபெறு மருமறைக ளறிதற்கு மறியொணா
வாறுமுக மான மயிலா. (7)

கதிர்கொள்வடி வேலவா கனகமயி லேறிவர்க்
கஞ்சனைச் சிறை யிட்டவா
கங்கைசுத னானவா வெங்குநிறை கின்றவா
கங்குல் பகலற நின்றவா
எதிர்சூ ரழித்தவா வென்னுளக் கமலவா
வென துயிர்க் குயிரானவா
வென்கண்மணி யானவா வென்றுயர கற்றவா
யீராறு மலர் நயனவா
மதிமுக சுரக்கரி வள்ளிமண வாளவா
மரகர்துயர் களை தீர்த்தவா
மான்மருக னானவா வாரணத் துவஜவா
வணமிகுஞ் சரவண பவா

அதிர்சிலம் பசையவா வன்பர்கட் கினியவா
அடியேனை யாளவாவா
அருமைபெறு மருமறைக ளறிதற்கு மறியொணு
வாறுமுக குருவே வாவா. (8)

உறகின்ற சிவகாமி பாகநட ராஜனுத
லுருகணில் வருசண் முகா
ஓங்கார ரீங்கார ஸ்ரீங்கார சண்முகா
வுயர்சடா க்ஷரசண் முகா
குலவரை நடுங்கவரு சூரனையு மயிலாகக்
கொண்டு மீதுரு சண்முகா
குறவர்மகள் வள்ளிதெய் வானைமகிழ் சண்முகா
கூறறிய வேற்சண் முகா
நிலமெலா முண்டமால் மருகதிரு சண்முகா
நீள்சேவற் கொடி சண்முகா
நிருமலா னந்தநா தாந்தபர சண்முகா
நிகரில் நிட்குண சண்முகா
அலகிலா தில்லையம் பதிவாழுஞ் சண்முகா
அடியேனை யாள் சண்முகா
அருமைபெறு மருமறைக ளறிதற்கு மறியொணு
வாறுமுக மாஞ்சண் முகா (9)

பஞ்சாமிர்த பக்திரசக் கீர்த்தனம் முற்றிற்று.

---

அமகு விலாசம்:—எஸ். டி. மாணிக்க நாயகர்,
இராமலிங்கம் அண்டு கம்பெனி, சூளை ஐரோட், மதராஸ்